|| श्रीः ||

श्री राम नाम सङ्कीर्तनम्

ஸ்ரீ ராம நாம ஸங்கீர்த்தனம்

Published by :
M. K. RANGASWAMI AIYANGAR,
14, SRIRAM NAGAR NORTH STREET,
TEYNAMPET, MADRAS 18.
July **1965**

न धर्मनिष्ठोऽस्मि न चात्मवेदी
न भक्तिमान् त्वच्चरणारविन्दे ।
अकिंचनोऽनन्यगतिः शरण्य
त्वत्पादमूलं शरणं प्रपद्ये ॥

ந தர்மநிஷ்டோஸ்மி ந ச ஆத்மவேதீ
ந பக்திமாந் த்வச்சரணாரவிந்தே |
அகிஞ்சநோ அநந்யகதி: சரண்ய
த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே ||

ந தர்மநிஷ்ட: அஸ்மி - நான் தர்மங்களை அநுஷ்டிப்பவனல்லன்;
நச ஆத்மவேதீ - ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவனல்லன்;
த்வச்சரணாரவிந்தே - உன் திருவடித் தாமரைகளில்,
ந பக்திமாந் - பக்தி செலுத்துகிறவனுமல்லன்;
அகிஞ்சந: - ஒன்றுமில்லாதவன் (ஞானமில்லாதவன்),
அநந்ய கதி: - வேறு புகலிடம் இல்லாதவன்;
ஶரண்ய - சரணடையத் தக்கவனே,
த்வத்பாதமூலம் - உன் திருவடியையே,
ஶரணம் ப்ரபத்யே - சரணமாக வந்தடைகிறேன்.

श्रीमन्नभीष्टवरद त्वामस्मि शरणं गतः ।
एतद्देहावसाने मां त्वत्पादं प्रापय स्वयम् ॥

ஶ்ரீமந்நபீஷ்டவரத த்வாமஸ்மி ஶரணம் கத: |
ஏதத்தேஹாவஸாநே மாம் த்வத்பாதம் ப்ராபய ஸ்வயம் ||

ஶ்ரீமந் - லக்ஷ்மியுடன் சேர்ந்திருப்பவனே, அபீஷ்ட வரத - கேட்கும் வரங்களை கொடுப்பவனே, த்வாம் - உம்மை, சரணம் கத: - சரணமடைந்துவிட்டேன். ஏதத் தேஹாவஸாநே-இந்தத் தேகத்தினுடைய முடிவில், மாம்-என்னை, ஸ்வயம் - நீங்களாகவே, த்வத்பாதம் - உங்கள் திருவடிகளில், ப்ராபய - சேரும்படி செய்தருளவேண்டும்.

மணவாசி **ரங்கஸ்வாமி**

ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி, மதுராந்தகம்.

माता रामो मत्पिता रामचन्द्रः
स्वामी रामो मत्सखा रामचन्द्रः ।
सर्वस्वं मे रामचन्द्रो दयालुः
नान्यं जाने नैव जाने न जाने ॥

மாதா ராமன், என் பிதா ராமசந்திரன்,
ஸ்வாமி ராமன், என் சகா ராமசந்திரன்.
எல்லாம் எனக்குத் தயாளுவாகிய ராமசந்திரன்.
வேறொருவரையும் நான் அறியேன்,
அறியவே அறியேன், அறியேன்.

முன்னுரை

ஆதியில் பிரம்மதேவன் வாக்குக்கு இணங்கி வால்மீகி முனிவர் அருளிச்செய்த ராமாயண காவியத்தை இந்தப் புண்ணிய பூமியில் இமயத்திலிருந்து குமரி வரையில் லட்சக்கணக்கான மக்கள் வருஷந்தோறும் படித்தும் கேட்டும் அநுபவித்து வருகிறார்கள். இந்தக் கதையைப் பல மொழிகளிலும் இயற்றியிருக்கிறார்கள். வடநாட்டில் பக்த துளஸிதாஸ் ஹிந்தியில் இயற்றிய ராமாயணம் மிகவும் சிறந்தது. காலத்துக்கேற்ற சில மாறுதல்களுடனும் ரஸ பாவத்துடனும் தமிழில் கம்பன் இயற்றிய ராமாயணம் புகழ்பெற்றது. கம்பராமாயணத்தைப் பின்பற்றி அருணசலக் கவிராயர் என்பவர் ராம கதையை ரஸமான கீர்த்தனங்களுடன் நாடகமாக அமைத்துள்ளார். தியாகராஜ ஸ்வாமிகள் இந்த ராமாமிர்தத்தை நன்றாக அநுபவித்து, பல ராகங்களில் கணக்கற்ற கீர்த்தனங்களாகப் பாடி ஆனந்தித்திருக்கிறார்.

பகவானுக்கு உள்ள ஆயிரம் நாமங்களையும் சொல்ல இயலாதவர்கள் அந்தப் பலனை "ராமா" என்ற ஒரு நாமத்தைச் சொல்லி அடையலாம் என்று சிவபெருமான் பார்வதிக்குச் சொன்னதாக ஒரு வரலாறு உண்டு. ராமநாம பலனை விவரிக்கும் கம்பன் வாக்கு மிகவும் ரஸமானது,

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண் டெழுத்தினால்.

பல காரியங்க்ளில் ஈடுபட்டிருக்கும் பொதுஜனங்களுக்கு, காவியங்களைப் படிக்கவும் கீர்த்தனங்களைப் பாடவும் வசதிகள் கிடைப்பதில்லை. எனவே, ஐந்தே நிமிஷங்களில் பாடும்படியான ராமநாம கீர்த்தனையை இங்கே கொடுத்திருக்கிறேன்.

இது "ரகுபதி ராகவ ராஜாராம்" என்னும் மெட்டில் பண்டித லட்சுமணாச்சார் என்ற மகாவித்வான் ராமநாமத்தை நாமாவளியாகவே இயற்றியது.

ஸ்தோத்திரங்கள் செய்யும் பொழுது அர்த்தம் பாவங்களை அறிந்து ராமஸ்மரணையுடன் செய்யவேண்டும் என்பது பெரியோர்களின் கருத்து. அப்படிச் செய்வதில் அலாதி ஆனந்தம் ஏற்படும். உதாரணமாக, 'வாமே பூமிஸுதா' என்று ஆரம்பிக்கும் சுலோகத்தைப் பெரிய வித்வான்கள் இராகமாலிகையாகப் பாடக் கேட்டு அநுபவித்தவர் பலர். இந்தச் ச்லோகத்தின் அர்த்தத்தை உணர்ந்து இராம பட்டாபிஷேகக் கோலத்தைக் கண்டு களிப்பது ஆனந்தமாக இருக்கும். எனவே அந்த ச்லோகம் அடுத்த பக்கத்தில் அர்த்தத்துடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விசுவாவஸு வைகாசி 8.

எம். கே. ரங்கஸ்வாமி அய்யங்கார்
திருவரங்கம், சென்னை-18.

वामे भूमिसुता पुरश्च हनुमान् पश्चात् सुमित्रासुतः
शत्रुघ्नो भरतश्च पार्श्वदलयोः वाय्वादिकोणेषु च ।
सुग्रीवश्च विभीषणश्च युवराट् तारासुतो जाम्बवान्
मध्ये नीलसरोजकोमलरुचिं रामं भजे श्यामलम् ॥

வாமே பூ^{4}மிஸுதா புரஶ்ச ஹநுமாந்
பஶ்சாத் ஸுமித்ரா ஸுத:
சத்ருக்^{4}நோ ப^{4}ரதஶ்ச பார்ச்வத^{3}லயோ;
வாய்வாதிகோணேஷு ச |
ஸுக்^{3}ரீவஶ்ச விபீ^{4}ஷணஶ்ச யுவராட்
தாராஸுதோ ஜாம்ப^{3}வாந்
மத்^{4}யே நீல ஸரோஜகோமலருசிம்
ராமம் பஜே ச்யாமலம் ||

वामे	இடப் பக்கத்தில்
भूमिसुता	பூமிப்பெண்ணுகிய சீதையும்
पुरः	எதிரில்
हनुमांश्च	ஹநுமானும்
पश्चात्	பின்புறத்தில்
सुमित्रासुतः	சுமித்திரையின் பிள்ளை லக்ஷ்மணனும்
पार्श्वदलयोः	இரு பக்கங்களிலும்
शत्रुघ्नः भरतश्च	சத்துருக்னனும் பரதனும்
वाय्वादिकोणेषु च	வாயு முதலிய மூலைகளில்
सुग्रीवश्च विभीषणश्च युवराट्	சுக்கிரீவன், விபீஷணன்
तारासुतो जाम्बवान्	அங்கதன், ஜாம்பவான் முதலியவர்களும்
मध्ये	(இவர்களின்) நடுவில் (வீற்றிருக்கும்)
नीलसरोजकोमलरुचिम्	கருநெய்தல் போல் அழகிய காந்தியையுடைய
रामं भजे	ஶ்ரீ ராமசந்திரனை ஸேவிக்கிறேன்.

॥ श्रीः ॥

॥ श्री नामरामायणम् ॥

ஸ்ரீ நாமராமாயணம்

॥ बालकाण्डम् ॥ பால காண்டம்

१. शुद्धब्रह्म-परात्पर राम

1. சுத்^{3}த^{4}ப்^{3}ரஹ்ம-பராத்பர ராம

காலத்துக்கும் பிரகிருதிக்கும் அப்பாற்பட்ட பரப்பிரம்மமாகிய ராமா!

२. कालात्मक-परमेश्वर राम

2. காலாத்மக-பரமேச்வர ராம

காலரூபியாகிய பரமேசுவரனே!

३. शेष-तल्प-सुख-निद्रित राम

3. சேஷதல்ப-ஸுக^{2}-நித்^{3}ரித ராம

ஆதிசேஷனைப் படுக்கையாய்க் கொண்டு ஆனந்த நித்திரையில் ஆழ்ந்திருப்பவனே!

४. ब्रह्माद्यमर-प्रार्थित राम

4. ப்^{3}ரஹ்மாத்^{3}யமர-ப்ரார்த்தி^{2}த ராம

பிரம்மா முதலிய தேவர்களால் வேண்டிக் கொள்ளப்பட்டவனே!

५. चण्ड-किरण-कुल-मण्डन राम

5. சண்ட^{3}-கிரண-குல-மண்ட^{3}ந ராம

சூரிய குலத்துக்குப் பூஷணமாய்த் தோன்றியவனே!

६. श्रीमद्दशरथ-नन्दन राम

6. ஸ்ரீமத்^{3} த^{3}சரத^{2}-நந்த^{3}ந ராம

தசரதப்பெருமகனுக்கு ஆனந்தம் அளித்தவனே!

இதன் பொழிப்புரை ராமகிருஷ்ண மடத்தார் பிரசுரித்திருக்கும் பஜனாவளியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

७. कौसल्यासुख-वर्धन राम

7. கௌஸல்யா-ஸுக²-வர்த்த⁴ந ராம

கௌசல்யைக்கு இன்பத்தை வளர்த்தவனே!

८. विश्वामित्र-प्रियधन राम

8. விச்வாமித்ர-ப்ரியத⁴ந ராம

விசுவாமித்திரருக்கு ப்ரியமான செல்வமாய் விளங்கியவனே!

९. घोर-ताटका-घातक राम

9. கோ⁴ர-தாடகா-கா⁴தக ராம

கொடுமையே உருவெடுத்த தாடகையைக் கொன்றவனே!

१०. मारीचादि-निपातक राम

10. மாரீசாதி³-நிபாதக ராம

மாரீசன் முதலியவர்களை அழித்தவனே!

११. कौशिक-मख-संरक्षक राम

11. கௌசிக-மக²-ஸம்ரக்ஷக ராம

விசுவாமித்திருடைய யாகத்தைக் காப்பாற்றியவனே!

१२. श्रीमदहल्योद्धारक राम

12. ஶ்ரீமத³ஹல்யோத்³தா⁴ரக ராம

அகலியைக்குப் பெருவாழ்வு அளித்தவனே!

१३. गौतम-मुनि-संपूजित राम

13. கௌ³தம-முநி-ஸம்பூஜித ராம

கௌதம முனிவரால் நன்கு பூஜிக்கப் பெற்றவனே!

१४. सुरमुनि-वरगण-संस्तुत राम

14. ஸுரமுநி-வரக³ண-ஸம்ஸ்துத ராம

தேவர்களாலும் முனிவர் கூட்டத்தாலும் போற்றப் பெற்றவனே!

१५. नाविक-धावित-मृदु-पद राम

15. நாவிக-தா⁴வித-ம்ருது³பத³ ராம

ஓடக்காரனால் சோதிக்கப்பெற்ற மெதுவான பாதங்களை யுடையவனே!

१६. मिथिलापुरजन-मोहक राम

16. மிதி²லாபுரஜந-மோஹக ராம

மிதிலாபுரி மக்களை மயக்கியவனே!

१७. विदेह-मानस-रंजक राम

17. விதே³ஹ-மாநஸ-ரஞ்ஜக ராம

ஜனகனுடைய மனத்தைக் களிப்பித்தவனே!

१८. त्र्यंबक-कार्मुक-भंजक राम

18. த்ரயம்ப³க-கார்முக-ப⁴ஞ்ஜக ராம

சிவனுடைய வில்லை முறித்தவனே!

१९. सीतार्पित-वर-मालिक राम

19. ஸீதார்ப்பித-வர-மாலிக ராம

ஸீதை அளித்த மணமாலையை அணிந்தவனே!

२०. कृत-वैवाहिक-कौतुक राम

20. க்ருத-வைவாஹிக-கௌதுக ராம

விவாகத்தில் அணிந்த கங்கணத்துடன் விளங்குபவனே!

२१. भार्गव-दर्प-विनाशक राम

21. பா⁴ர்க³வ-த³ர்ப-விநாசக ராம

பரசுராமகர்வ பங்கம் செய்தவனே!

२२. श्रीमदयोध्या-पालक राम

22. ஸ்ரீமத³யோத்⁴யா-பாலக ராம

அழகு மிக்க அயோத்யையின் அரசே!

॥ अयोध्याकाण्डम् ॥ அயோத்யா காண்டம்

२३. अगणित-गुणगण-भूषित राम

23. அக[3]ணித-கு[3]ணக[3]ண-பூ[4]ஷித ராம

எண்ணிறந்த நற்குணங்களால் அலங்கரிக்கப் பெற்ற வனே!

२४. अवनी-तनया-कामित राम

24. அவநீ-தநயா-காமித ராம

பூதேவியின் புதல்வியாகிய சீதையின் அன்புக்குரிய வனே!

२५. राकाचन्द्र-समानन राम

25. ராகாசந்த்[3]ர-ஸமாநந ராம

பௌர்ணமி சந்திரனுக்கு நிகரான முகமுடைய வனே!

२६. पितृवाक्याश्रित-कानन राम

26. பித்ரு-வாக்யாச்ரித-காநந ராம

தந்தை சொற்கொண்டு வனம் சென்றவனே!

२७. प्रियगुहविनिवेदित-पद राम

27. ப்ரியகுஹ-விநிவேதி[3]த-பத[3] ராம

அன்புமிக்க குகனுல் நாடு கொடுக்கப்பட்டவனே!

२८. तत्क्षालित-निज-मृदु-पद राम

28. தத்க்ஷாலித நிஜ-ம்ருது[3]பத[3] ராம

அவனுல் சோதிக்கப்பட்ட மெதுவான பாதங்களை உடையவனே!

२९. भरद्वाजमुखानन्दक राम

29. ப[4]ரத்[3]வாஜமுகா[2]நந்த[3]க ராம

பரத்வாஜர் முதலியோர்க்கு ஆனந்தம் அளித்தவனே

३०. चित्रकूटाद्रि-निकेतन राम
30. சித்ரகூடாத்[3]ரி-நிகேதந ராம
சித்திரகூட மலையை வாஸஸ்தானமாகக் கொண்டவனே!

३१. दशरथ-सन्तत-चिन्तित राम
31. த[3]சரத[2]-ஸந்தத-சிந்தித ராம
தசரதரால் இடையறுது சிந்திக்கப்பெற்றவனே!

३२. कैकेयी-तनयार्थित राम
32. கைகேயீ-தநயார்த்தி[2]த ராம
கைகேயி புத்திரனுல் வேண்டிக்கொள்ளப்பட்டவனே!

३३. विरचित-निज-पितृ-कर्मक राम
33. விரசித-நிஜ-பித்ரு-கர்மக ராம
பிதாவின் ஈமச்சடங்குகளைச் செய்தவனே!

३४. भरतार्पित-निज-पादुक राम
34. ப[4]ரதார்ப்பித-நிஜ-பாது[3]க ராம
பரதனுக்குத் தன் பாதுகைகளை அளித்தவனே!

३५. दण्डकावन-जन-पावन राम
35. தண்ட[3]காவந-ஜந-பாவந ராம
தண்டகாரண்ய ஜனங்களைப் புனிதமாக்கியவனே!

॥ आरण्यकाण्डम् ॥ ஆரண்ய காண்டம்

३६. दुष्ट-विराध-विनाशन राम
36. துஷ்ட-விராத[4]-விநாசந ராம
கொடியோனை விராதனை அழித்தவனே!

३७. शरभंग-सुतीक्ष्णार्चित राम

37. சரப^{4}ங்க^3-ஸுதீக்ஷ்ண-அர்ச்சித ராம

சரபங்கராலும் ஸுதீக்ஷ்ணராலும் அர்ச்சிக்கப் பட்டவனே!

३८. अगस्त्यानुग्रह-वर्धित राम

38. அகஸ்த்யாநுக்^{3}ரஹ-வர்த்தி^{4}த ராம

அகஸ்தியருடைய அநுக்கிரகத்தால் செழித்தவனே!

३९. गृध्राधिप-संसेवित राम

39. க்ருத்^{4}ராதி^{4}ப-ஸம்ஸேவித ராம

கழுகரசனால் நன்றாய்ச் சேவிக்கப்பெற்றவனே!

४०. पंचवटी-तट-सुस्थित राम

40. பஞ்சவடீ-தட-ஸுஸ்தி^{2}த ராம

பஞ்சவடீ தீரத்தை நல்ல இருப்பிடமாகக் கொண்டவனே!

४१. शूर्पणखार्ति-विधायक राम

41. சூர்ப்பணகா^{2}ர்த்தி-விதா^{4}யக ராம

சூர்ப்பணகைக்குத் துயர் விளைவித்தவனே!

४२. खरदूषण-मुख-सूदक राम

42. க^{2}ர-தூ^{3}ஷண-முக^2-ஸூத^{3}க ராம

கரன் தூஷணன் முதலியவர்களைக் கொன்றவனே!

४३. सीता-प्रिय-हरिणानुग राम

43. ஸீதா-ப்ரிய-ஹரிணாநுக^3 ராம

சீதை விரும்பிய மானைத் தொடர்ந்தவனே!

४४. मारीचार्तिकृदाशुग राम

44. மாரீசார்த்திக்ருதா^{3}சுக^3 ராம

மாரீசனைத் துளைக்க அம்பெய்தியவனே!

४५. विनष्ट-सीतान्वेषक राम

45. விநஷ்ட-ஸீதாந்வேஷக ராம

காணமற்போன ஸீதையைத் தேடி அலைந்தவனே!

४६. गृध्राधिप-गति-दायक राम

46. க்^{3}ருத்^{4}ராதி^{4}ப-க^{3}தி-தா^{3}யக ராம

கழுகரசனாகிய ஜடாயுவுக்கு உத்தம கதியை அளித்தவனே!

४७. शबरी-दत्त-फलाशन राम

47. சப^{3}ரீ-த^{3}த்த-ப^{2}லாசந ராம

சபரீ அளித்த பழத்தை உண்டு களித்தவனே!

४८. कबन्ध-बाहुच्छेदन राम

48. கப^{3}ந்த^{4}-பா^{3}ஹுச்சே^{2}த^{3}ந ராம

கபந்தனுடைய கைகளை வெட்டியவனே!

॥ किष्किन्धाकाण्डम् ॥ கிஷ்கிந்தாகாண்டம்

४९. हनुमत्-सेवित-निजपद राम

49. ஹநுமத்-ஸேவித-நிஜபத^{3} ராம

ஹநுமானால் சேவிக்கப்பெற்ற திருவடிகளை உடையவனே!

५०. नत-सुग्रीवाभीष्टद राम

50. நத-ஸுக்^{3}ரீவாபீ^{4}ஷ்டத^{3} ராம

வணங்கிய சுக்கிரீவனுக்கு விருப்பத்தை அளித்தவனே!

५१. गर्वित-वालि-संहारक राम

51. க^{3}ர்வித-வாலி-ஸம்ஹாரக ராம

கர்வித்திருந்த வாலியைக் கொன்றவனே!

५२. वानर-दूत-प्रेषक राम

52. வாநர-தூ³த ப்ரேஷக ராம

வானர தூதர்களை அனுப்பியவனே!

५३. हितकर-लक्ष्मण-संयुत राम

53. ஹிதகர-லக்ஷ்மண-ஸம்யுத ராம

இதத்தையே நாடிச் செய்கின்ற லக்ஷ்மணனுடன் கூடியவனே!

॥ सुन्दरकाण्डम् ॥ ஸுந்தர காண்டம்

५४. कपिवर-संतत-संस्मृत राम

54. கபிவர-ஸந்தத-ஸம்ஸ்ம்ருத ராம

வானர சிரேஷ்டனுன ஆஞ்சநேயனால் இடையருது நினைக்கப்பெற்றவனே!

५५. तद्गति-विघ्न-ध्वंसक राम

55. தத்³க³தி விக்⁴ந-த்⁴வம்ஸக ராம

அந்த ஆஞ்சநேயனுடைய போக்குக்கு (ஸமுத்திரம் தாண்டுகையில்) விளைந்த இடையூறுகளைக் களைந்தவனே!

५६. सीता-प्राणाधारक राम

56. ஸீதா-ப்ராணுதா⁴ரக ராம

சீதையின் பிர்ாணனுக்கு ஆதாரமானவனே!

५७. दुष्ट-दशानन-दूषित राम

57. து³ஷ்ட-த³சாநந-தூ³ஷித ராம

தீய ராவணனால் நிந்திக்கப்பட்டவனே!

५८. शिष्ट-हनूमद्भूषित राम

58. சிஷ்ட-ஹநூமத்³பூ⁴ஷித ராம

தூய ஹநுமானால் துதிக்கப் பெற்றவனே!

५९. सीतावेदित-काकावन राम

59. ஸீதாவேதி³த-காகாவந ராம

காகாசுரனைக் காத்த பெருமையைச் சீதையால் விளக்கப்பெற்றவனே!

६०. कृतचूडामणि-दर्शन राम

60. க்ருதசூடா³மணி-த³ர்சந ராம

சூடாமணியைத் தரிசிக்கப்பெற்றவனே!

६१. कपिवर-वचनाश्वसित राम

61. கபிவர-வசநாச்வாஸித ராம

வானர சிரேஷ்டனுடைய வார்த்தையால் ஆறுதலடைந்தவனே!

॥ युद्धकाण्डम् ॥ யுத்த காண்டம்

६२. रावण-निधन-प्रस्थित राम

62. ராவண-நித⁴ந-ப்ரஸ்தி²த ராம

ராவண வதத்துக்குப் புறப்பட்டவனே!

६३. वानर-सैन्य-समावृत राम

63. வாநர-ஸைந்ய-ஸமாவ்ருத ராம

வானர சைன்யத்தால் சூழப்பெற்றவனே!

६४. शोषित-सरिदीशार्थित राम
64. சோஷித-ஸரிதீ³சார்த்தி²த ராம
துன்புற்ற ஸமுத்ரராஜனல் பிரார்த்திக்கப் பெற்றவனே.

६५. विभीषणाभय-दायक राम
65. விபீ⁴ஷணப⁴ய-தா³யக
விபீஷணனுக்கு அபயதானம் செய்தவனே! ராம

६६. पर्वत-सेतु-निबन्धक राम
66. பர்வத-ஸேது-நிப³ந்த⁴க ராம
மலைகளால் அணை கட்டியவனே!

६७. कुंभकर्ण-शिरश्छेदक राम
67. கும்ப⁴கர்ண-சிரஶ்சே²த³க ராம
கும்பகர்ணனுடைய சிரத்தைச் சேதித்தவனே!

६८. राक्षस-संघ-विमर्दक राम
68. ராக்ஷஸ-ஸங்க⁴-விமர்த³க ராம
அரக்கர் கூட்டத்தை அழித்தவனே!

६९. अहिमहि-रावण-चारण राम
69. அஹிமஹி-ராவண சாரண ராம
அஹிமஹி ராவணனைத் தூதனுகக் கொண்டவனே!

७०. संहृत-दशमुख-रावण राम
70. ஸம்ஹ்ருத-த³சமுக²-ராவண ராம
பத்துத் தலை ராவணனை ஸம்ஹாரம் செய்தவனே!

७१. विधि-भव-मुख-सुर-संस्तुत राम
71. விதி⁴-பவ-முக²-ஸுர-ஸம்ஸ்துத ராம
பிரம்மன், ருத்திரன் முதலிய தேவர்களால் பெரிதும் போற்றப் பெற்றவனே!

७२. खस्थित-दशरथ-वीक्षित राम

72. க^{2}ஸ்தி^{2}த-^{3}தசரத^{2}-வீக்ஷித ராம

வானதித்ல் தோன்றிய தசரதரால் கடாக்ஷிக்கப் பெற்றவனே!

७३. सीता-दर्शन-मोदित राम

73. ஸீதா-த^{3}ர்சந-மோதி^{3}த ராம

ஸீதாதர்சனத்தால் மகிழ்ந்தவனே!

७४. अभिषिक्त-विभीषण-नत राम

74. அபிஷிக்த-விபீஷண-நத ராம

பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்ட விபீஷணனால் வணங்கப்பட்டவனே!

७५. पुष्पकयानारोहण राम

75. புஷ்பகயாநாரோஹண ராம

புஷ்பக விமானத்தில் ஏறியவனே!

७६. भरद्वाजाभिनिषेवण राम

76. ப^{4}ரத்^{3}வாஜாபி^{4}நிஷேவண ராம

பரத்வாஜரை மீண்டும் வணங்கியவனே!

७७. भरत-प्राण-प्रियकर राम

77. ப^{4}ரத-ப்ராண-ப்ரியகர ராம

பரதனுடைய பிராணனைக் காத்துப் பிரியத்தைச் செய்தவனே!

७८. साकेतपुरी-भूषण राम

78. ஸாகேதபுரீ-பூ^{4}ஷண ராம

அயோத்யா நகருக்கு அணிகலன் ஆகியவனே!

७९. सकल-स्वीय-समानत राम
79. ஸகல-ஸ்வீய-ஸமாநத ராம
தம் மக்கள் எல்லாராலும் வணங்கப்பெற்றவனே!

८०. रत्न-लसत्-पीठास्थित राम
80. ரத்ந-லஸத்-பீடா[2]ஸ்தி[2]த ராம
ரத்தினங்களால் பிரகாசிக்கும் பீடத்தில் அமர்ந்தவனே!

८१. पट्टाभिषेकालंकृत राम
81. பட்டாபி[4]ஷேகாலங்க்ருத ராம
பட்டாபிஷேகத்துக்காக அலங்கரிக்கப்பெற்றவனே;

८२. पार्थिव-कुल-संमानित राम
82. பார்த்தி[2]வ-குல-ஸம்மாநித ராம
அரசர் கூட்டத்தால் கௌரவிக்கப் பெற்றவனே!

८३. विभीषणार्पित-रंगक राम
83. விபீ[4]ஷணார்ப்பித-ரங்க[3]க ராம
விபீஷணனுக்கு ரங்கநாதனை (வழிபடுவதற்கு) அளித்தவனே!

८४. कीशकुलानुग्रह-कर राम
84. கீசகுலாநுக்[3]ரஹ-கர ராம
வானர சமூகத்துக்கு அநுக்கிரகம் செய்தவனே!

८५. सकल-जीव-संरक्षक राम
85. ஸகல-ஜீவ-ஸம்ரக்ஷக ராம
எல்லா உயிர்களையும் போற்றிக் காப்பாற்றுபவனே!

८६. समस्त-लोकाधारक राम
86. ஸமஸ்த-லோகாதா[4]ரக ராம
எல்லா உலகங்களுக்கும் ஆதாரமாகியவனே!

राम राम जय राजाराम । रामचन्द्र जय सीताराम ॥

பிரார்த்தனை

नान्या स्पृहा रघुपते हृदयेऽस्मदीये
सत्यं वदामि च भवानखिलान्तरात्मा ।
भक्तिं प्रयच्छ रघुपुङ्गव निर्भरां मे
कामादिदोषरहितं कुरु मानसं च ॥

நாந்யா ஸ்ப்ருஹா ரகு^{4}பதே ஹ்ருத^{3}யேஸ்மதீ^{3}யே
ஸத்யம் வதா^{3}மி ச ப^{4}வாந் அகி^{2}லாந்தராத்மா |
ப^{4}க்திம் ப்ரயச்ச ரகு^{4}புங்க^{3}வ நிர்ப^{4}ராம் மே
காமாதி^{3}தோ^{3}ஷரஹிதம் குரு மாநஸம் ச ||

(ரகுபதே) ரகுகுலத் தலைவனே, (அஸ்மதீயே ஹ்ருதயே) என்மனத்தில் (நாந்யாஸ்ப்ருஹா) வேறோர் ஆசையுமில்லை, (ஸத்யம் வதாமி) சத்தியமாகச் சொல்லுகிறேன். (பவாந் அகிலாந்தராத்மா) நீ அனைவர் உள்ளத்திலும் உறையும் ஆத்மா. (ரகு^{4}புங்க^{3}வ) ரகுஶ்ரேஷ்டனே, (மே) எனக்கு, (நிர்ப^{4}ராம் பக்திம் ப்ரயச்ச) பாரம் நீங்கும்படியான பக்தியைக் கொடு. (காமாதி^{3}-தோ^{3}ஷரஹிதம்) காமம் முதலிய தோஷமற்றதாக, (மாநஸம் குரு) மனத்தைச் செய்.

குடும்பப் பத்திரிகைகள்

கலைமகள் - மணிக் கணக்காக உட்கார்ந்து சுவாரஸ்ய மாகவும் உபயோகமாகவும் படிக்கக்கூடிய கதைகளும் கட்டுரைகளும் புதிய தொடர்கதைகளும் நிறைந்தது. தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழ் மணத்தை அவர்களுக்கு வழங்கும் மாதப் பத்திரிகை.

வருட சந்தா, தீபாவளி மலர் உள்பட ரூ. 7/50

மஞ்சரி - நாட்டின் பல பாஷைகளில் வெளியாகும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளிலிருந்து சிறந்த விஷயங்களைப் படித்து, ஆராய்ந்து, பற்பல ருசியும் பயனும் மிகுந்த கட்டுரைகளைத் தாங்கி வருகிறது. அநேகமாக, ஒவ்வோர் இதழிலும் ஒரு முழுப் புத்தகச் சுருக்கமும் வருகிறது.

வருட சந்தா, மலர் உள்பட ரூ. 6

கண்ணன் - ஐந்து முதல், பதினைந்து வயது வரையுள்ள உங்கள் செல்வக் குழந்தைகளைக் களிப்பில் ஆழ்த்தும் கதைகளும் அறிவை வளர்க்கும் விசேஷப் பகுதிகளும் அவர்களுடைய திறமையைத் தூண்டும் அம்சங்களும் நிறைந்தது.

வருட சந்தா, தீபாவளி மலர் உள்பட ரூ. 5/50

மூன்று பத்திரிகைகளின் சந்தா, மலர்கள் உள்பட ரூ. 19 ஆகிறது. மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 17 தான்.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.

The M.L.J. Press (P.), Ltd., Madras-4.

यो ब्रह्माणं विदधाति पूर्वं
यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।
तँ ह देवमात्मबुद्धिप्रकाशं
मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

யோ ப்[3]ரஹ்மாணம் வித[3]தா[4]தி பூர்வம்
யோ வை வேத[3]ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை ।
தகும் ஹ தே[3]வம் ஆத்மபுத்[3]தி[4]ப்ரகாசம்
முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்[3]யே ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

முதலில் பிரமனைப் படைத்து, அவனுக்கு வேதங்களை வெளியிடுகிறவனும், ஆன்ம அறிவே ஒளியாகத் திகழ்கிறவனுமான அத்தகைய தேவனை, மோக்ஷத்தை விரும்பும் நான் புகலாகக் கொள்கிறேன்.

விண்ணப்பம்

முதல் பதிப்பு 1000
இரண்டாவது பதிப்பு 2000

இப்பொழுது பிரசுரம் செய்வது மூன்றும் பதிப்பு, 1000 பிரதிகள். இவை நேரில் வந்து கேட்பவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படும். தபாலில் பெற்றுக் கொள்பவர்களும் தபாலில் விரும்புகிறவர்களும் பதினைந்து பைசா (மூன்று ஐந்து பைசா) தபால் பில்லைகளை ஒட்டாமல் அனுப்பலாம். விலாஸத்தைத் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.

எம். கே. ரங்கஸ்வாமி ஐயங்கார்
14, ஶ்ரீராமநகர் வடக்கு வீதி
தேனாம்பேட்டை, சென்னை- .